FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

This Question Paper consists of 31 questions and 8 printed pages.
8 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 31 வினாக்கள் உள்ளன.

Roll No. | | | | | | | | | | | | | Code No. **52/S/A/TM**

Set **A**

# TAMIL

# தமிழ்

# (237)

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி :

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் :

1. ____________________

2. ____________________

---

**I பொதுக்குறிப்புகள் :**

**1.** தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

**2.** வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

**3.** பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A, B, C, D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைதாளில் எழுத வேண்டும்.

**4.** பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

**5.** வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கபடாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

**6.** உங்களது வினாத்தாளின் **Code** எண் **52/S/A/TM-A** விடைத்தாளில் எழுதுங்கள்.

www.FirstRanker.com



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

**பொதுக்குறிப்பு :**

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A, B, C, D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

# TAMIL

# தமிழ்

# (237)

கால அளவு : **3** மணி நேரம் ] [ மொ. மதிப்பெண் : **100**

**குறிப்பு :** (1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

(2) வினாக்களை நன்கு புரிந்து கொண்டு விடையளிக்க.

(3) விடைகளுக்குரிய சரியான வினா எண்களை எழுதவும்.

**பொருத்தமான விடையை எடுத்து எழுதுக.** **1x11=11**

**1.** காகம் அணுகா மலை

(A) கொல்லி மலை (B) திரிகூட மலை (C) பழனி மலை (D) வேள்வி மலை

**2.** வைரமுத்து கட்சிகளின் கலப்பு மணத்தை எவ்வாறு அழைக்கிறோம் என்கிறார் ?

(A) கூட்டணி (B) தீப்பெட்டி (C) சிலுவை (D) ஐக்கிய அணி

**3.** உயிரோடு எப்போதும் கூடி நிற்கும் செல்வம் :

(A) கல்வி (B) கேள்வி (C) அழகு (D) செல்வம்

**4.** அம்பறாத் தூணி :

(A) அம்புகள் செய்யப் பயன்படுவது

(B) வாயில்களில் தொங்க விடப்படும் துணி

(C) அரண்மனை மகளிர் பயன்படுத்துவது

(D) அம்புக் கூடு

www.FirstRanker.com



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

5. சகாப்தம் என்ற சொல்லின் பொருள் :

(A) சபதம் (B) சந்தம் (C) வரலாறு (D) சப்தம்

6. பிறர் தர வராதவை :

(A) கல்வி (B) செல்வம்

(C) கல்வியும் செல்வமும் (D) தீதும் நன்றும்

7. __________ நிலையானது எனக் கருதக் கூடாது.

(A) கல்வி (B) அன்பு (C) அறிவு (D) செல்வம்

8. வளர்ந்த இந்தியாவின் கனவு எனக் கலாம் குறிப்பிடுவது :

(A) அனைவருக்கும் கல்வி (B) அனைவருக்கும்வேலை

(C) அனைவருக்கும் கழிப்பிட வசதி (D) அனைவருக்கும் குடிநீர்

9. எனியாக் கல்வின் கொள்ளளவு :

(A) 20 டன் (B) 30 டன் (C) 25 டன் (D) 35 டன்

10. ஐந்தாம் வேற்றுமை :

(A) கண்ணனது வீடு (B) மலையின் வீழருவி

(C) கத்தியால் வெட்டினான் (D) வீட்டைக் கட்டினான்

11. அடுக்குத் தொடர் :

(A) கல கல (B) வா! வா! வா! (C) இரவு பகல் (D) படபட

www.FirstRanker.com



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

**12.** கீழ்க்காணும் பத்தியைப்படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி.

தமிழர்கள் வீரத்தின் விளை நிலமாய் விளங்கியவர்கள். குழந்தை இறந்து பிறந்தாலும் பிறந்து இறந்தாலும் அதை வாளால் வெட்டிப் புதைப்பது அவர் தம் கொள்கை. விழுப்புண் படாத நாட்கள் அவர் வாழ்நாளில் பயன்படாத நாள்களாகும். அவர்களுக்கு மானம் உயிரினும் பெரிதாகும். தமிழர்களின் தலைசிறந்த பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல். தமிழ் மொழியையும் வட மொழியையும் தமிழர்கள் இரு கண்களாகப் போற்றினார்கள். கங்கையும் காவிரியும் யாவருக்கும் புண்ணிய நதிகளாகும். கங்கையில் நீராடி கைலாயத்தைக் கண்டாலும் தென்னெல்லையாம் குமரியையும் இராமேஸ்வரத்தையும் காணாமல் ஈடேற்றம் கிடையாது என்றும் கொள்கையுடையவர்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் கொள்கை உலகம் முழுவதும் பரவியது. இதன் அடிப்படையிலேயே பின்னால் வந்த பாரதியாரும்.

காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்

என்று பாடி மகிழ்ந்தார். இன்று உலக அரங்கில் தமிழகம் தந்த பொன்மொழி யாவரும் பின்பற்றும் ஏற்றமிக்க கண்ணொளியாய் அமைந்துள்ளது.

**வினாக்கள்:**

(1) தமிழரின் வீரக் கொள்கை பற்றி எழுதுக. **3**

(2) தமிழர்கள் எதில் ஈடேற்றம் இல்லை என்று எண்ணினார்கள் **3**

(3) தமிழர்களின் தலை சிறந்த பண்பு என்ன ? **2**

(4) கடலும் மலையும் எங்கள் கூட்டம் என்று கூறியவர் யார் ? **1**

(5) வாழ்வில் பயன்படாத நாட்களாக தமிழர்கள் எண்ணுவது எதனை ? **1**

(6) தமிழர்கள் இரு கண்களாக எதனைப் போற்றுகின்றனர் ? **2**

**13.** பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கியிவ் வையந் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சி சக்தியாம்
நாணு மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டீரோ



www.FirstRanker.com

**வினாக்கள் :**

(1) வையந் தழைப்பது எப்போது ? **1**

(2) பெண்ணுரு பெற்று நிற்பவள் யார் ? **1**

(3) நாணமும் அச்சமும் எதற்கு வேண்டும் ? ஏன் ? **2**

(4) நற்குடிப்பேணும் பெண்களுக்குரிய குணங்கள் யாவை ? **2**

**14.** கற்பதற்கு காட்டப்படும் உவமை யாது ? **1**

**15.** ஆணின் அடக்கு முறைக்கு என்ன சமாதானம் சொல்லப்படுவதாக கவிஞர் இளம்பிறை கூறுகிறார் ? **1**

**16.** சந்திரகுப்தர் அவைக்கு வந்த கிரேக்க தூதர் யார்? **1**

**17.** சிறியவர் என்ற பகுதி எதனால் ஒதுக்கப்பட்டுள்ளது ? **1**

**18.** தமிழில் மொழி பெயர்க்க **1**

(A) Internet

(B) Music

www.FirstRanker.com

**19.** (A) சேர்த்து எழுதுக. **4x½=2**

(i) பின் + ஆவது + என்று

(ii) ஆறு + சுவை

(iii) பெருமை + செல்வம்

(iv) கை + உற

(B) கீழ்க்காணும் விகுதிகளைக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு சொற்களை எழுதுக. **2**

(i) அம்

(ii) தல்

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

(C) கீழ்க்கண்ட தொடர்களில் விடுபட்ட இடத்தை எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக. 2

(i) உழைப்பைக் கொடு, ஊதியத்தைப் __________ .

(ii) மன ஒற்றுமை இன __________ களையும்.

(D) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு அதே பொருள் தரும் வேறு சொற்களை எழுதுக. 2

(i) கறுத்த

(ii) மல்லல்

(iii) தேரை

(iv) பரிதி

**20.** பின்வரும் மரபுத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க. 2

(1) தட்டிக்கழித்தல்

(2) பொடி வைத்தல்

**21.** உலக மக்கள் தொகை நாள் எது? 1

**22.** பத்திரிக்கையின் கடமை என்னும் தலைப்பில் ஒரு குறிப்புரை எழுதுக. 4

**23.** அகப்பொருள் என்றால் என்ன? விளக்குக. 5

**24.** குழந்தைத் தொழிலாளர் தடைச் சட்டம் குறித்த அறிவிப்பினை எழுதுக. 5

**அல்லது**

கல்வி உரிமைச் சட்டம் பற்றி கல்வி இயக்கம் தரும் விளம்பரத்தினை எழுதுக.

**25.** (A) இரங்குதல் - இறங்குதல் பொருள் வேறுபாடு கூறி அவற்றை தொடரில் அமைத்து எழுதுக. 2

(B) அகவுதல் - கூவுதல் எப்பறவைகளுக்குரிய ஒலிகள் என்பதைக் குறிப்பிடுக. 2



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

**26.** தொடர்வண்டி நிலையத்துத் தகவல் பலகையில் இடம்பெறும் தகவல்கள் குறித்த அட்டவணை தயாரிக்க. **5**

**அல்லது**

உமது பெயர் மணி / சீதை என்றும் உமது வங்கிக் கணக்கெண் 8097654 என்றும் கொண்டு ₹ 10,000-ஐ 4.11.2014 அன்று வங்கியில் இருந்து எடுப்பதற்கு ஏதுவாக கீழே கொடுக்கப்பட்டுள்ள சேமிப்புக் கணக்கிலிருந்து பணம் எடுக்கும் படிவத்தைப் பூர்த்தி செய்க. உமது முகவரி 28, மாதா கோவில் தெரு, குளச்சல், என்று கொள்க.

ATM மனுச் செய்து விட்டீர்களா

பாரத ஸ்டேட் பாங்கு

சேமிப்புக் கணக்கிலிருந்து பணம் எடுக்கும் படிவம்

நாள்: ___________

கணக்கெண்: ___________

எனக்கு மட்டும் (எழுத்தால் எழுதுக) ______________________________

______________________________ ரூபாய் வழங்கவும்.

₹

அடையாள வில்லை எண் : __________

பட்டியல் எண் : __________

பணம் வழங்குக

அனுமதிக்கும் அதிகாரி

கணக்கு வைத்திருப்பவர் பெயர்:

முகவரி: ______________________________

______________________________

தொலைபேசி எண்: ________________

கணக்கு வைத்திருப்பவர் பெயர்: ________________

கையொப்பம்: ______________________________

www.FirstRanker.com



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

**27.** அசோகனின் ஆட்சி சிறப்பை விவரிக்கவும். **5**

**அல்லது**

சிவன் காளீஸ்வரன் ஆன வரலாற்றை எழுதுக.

**28.** பிழை திருத்தம் செய்க. **5**

(1) தன்னிலவு வாணில் உளா வந்தது.

(2) யாளை கத்தியது.

(3) சிறு துறும்பும் பள்குத்த உதவும்.

(4) கயல்விழி பாடியது.

(5) எனது தந்தை நேற்று வெளியூரிலிருந்து வருவார்.

**29.** தலைக்கவசம் அணிய வேண்டியதன் அவசியத்தை அறிவுறுத்தி நண்பனுக்குக் கடிதம் எழுதுக. **7**

**அல்லது**

நீவிர் வாழும் பகுதியில் கழிவுநீர் மூலம் ஏற்படும் ஆபத்துகளை விளக்கி மாநகராட்சிக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

**30.** ஏதேனும் ஒன்றுக்கு நூறு சொற்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரை எழுதுக. **5**

(1) உலகத்தோடு ஒட்ட ஒழுகு

(2) கற்றது கை மண் அளவு

(3) தன்னம்பிக்கை

**31.** ஏதேனும் ஒன்றுக்கு இருநூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. **10**

(1) கல்வியின் இன்றியமையாமை

(2) முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்

(3) நான் விரும்பும் தலைவர்.

www.FirstRanker.com

- o O o -



www.FirstRanker.com